இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 17 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 10 – வியாழக்கிழமை 27 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 17 : Thiruvalluvar Year - 2057 - Aavani 10 - Thursday 27 August 2026 - Dak 12 Pages ₹ 5.00


# மாவேலியின் மண்ணில் சமத்துவம் மலரட்டும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஓணம் திருநாள் வாழ்த்து!

**சென்னை, ஆக. 27 –**

**“மாவேலியின் மண்ணில் சமத்துவம் மலரட்டும்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓணம் திருநாளையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**

தமிழர்கள் மற்றும் கேரளாவில் மலையாள மொழி பேசும் மக்கள் ஓணம் பண்டிகையை நேற்று கோலாகலமாகக் கொண்டாடினர்.

இந்நிலையில் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓணம் திருநாளையொட்டி நேற்று தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்ப தாவது:-



**மண்ணும் மக்களும் ஒன்றாக வாழ்ந்த ஒரு காலத்தின் நினைவைப் புதுப்பிப்பதே ஓணம். பிறப்பால் எவரும் உயர்ந்தவரும் அல்லர், தாழ்ந்தவரும் அல்லர். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பதே நம் இலக்காகட்டும்.**

**மாவேலியை வீழ்த்தப்பட்டவராக அல்லாமல், மக்களின் உள்ளங்களில் வாழும், வளமும் மகிழ்ச்சியும் நிறைந்த மன்னனாகக் கொண்டாடுவோம். மாவேலியின் மண்ணில் சமத்துவம் மலரட்டும். அனைவருக்கும் உளம் நிறைந்த ஓணம் வாழ்த்துகள்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




# தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை!

## ‘திராவிட மாடல்’ அரசின் சட்டத் திருத்தத்திற்கு ஆளுநர் ஒப்புதல்!

சென்னை, ஆக. 27 –

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப்பணிகளில் முன்னுரிமை வழங்கும் திராவிட மாடல் அரசின் சட்டத்திருத்த மசோதாவுக்கு தமிழ்நாடு ஆளுநர் அர்லேகர் ஒப்புதல் அளித்துள்ளார்.

அரசுப் பணிகளில் நேரடி பணி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டிய அனைத்து காலிப் பணியிடங்களிலும் 20 சதவீதம் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் சட்டம் 2010ம் ஆண்டு



கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில், ஏற்கெனவே அரசுப் பணியில் இருப்பவர்கள் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்ற வகைப்பாட்டின்கீழ் முன்னுரிமை நியமனத்துக்கு தகுதியற்றவர்கள் என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியது.

இந்த தீர்ப்பை தெளிவுப்படுத்தும் வகையில் கடந்த ஜனவரி மாதம் அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தமிழ்நாடு சட்டப்பேரவையில் மசோதா ஒன்றை கொண்டு வந்தது.

அரசுப் பணிகளில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்த இந்த சட்டத் திருத்த மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த சட்ட திருத்த மசோதாவிற்கு தமிழ்நாடு ஆளுநர் அர்லேகர் தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, இனிவரும் காலங்களில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப்பணிகளில் முன்னுரிமை வழங்கப்படும்.

ஏற்கெனவே, அரசுப் பணியில் நியமிக்கப்பட்டவர்கள், மிகை ஊதியம் கொண்ட பதவிகளில் குறிப்பிட்ட காலிப் பணியிடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

எனினும், 2010ஆம் ஆண்டு முதல் இதுவரை தமிழ் வழி முன்னுரிமையில் நடைபெற்ற பணிநியமனங்கள் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாட்டில் வேகமாக பரவி வரும் H1N1 பன்றிக் காய்ச்சல்!

## மருத்துவமனை வார்டுகளில் மக்கள் கூட்டம்!

சென்னை, ஆக. 27 –

தமிழ்நாட்டில் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே, H1N1 வகையைச் சேர்ந்த பன்றிக்காய்ச்சல் நோய் தொற்று மிக வேகமாகப் பரவி வருகிறது. தலைநகர் டெல்லியைத் தொடர்ந்து தற்போது தமிழகத்திலும் இதன் தாக்கம் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சமும், பீதியும் அடைந்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் 19 ஆக இருந்த பன்றிக்காய்ச்சல் பாதிப்பு எண்ணிக்கை, தற்போது 339 ஆக அதிர்ச்சி தரும் வகையில் உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் காய்ச்சல் வார்டுகளில் நோயாளிகளின் கூட்டம் அதிகரித்து வருகிறது.

காய்ச்சல், இருமல், தொண்டை வலி, கடுமையான தலைவலி, உடற்சோர்வு மற்றும் பசியின்மை ஆகியவை பன்றிக்காய்ச்சலின் முதன்மை அறிகுறிகளாகும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சிலருக்கு மூட்டு மற்றும் தசை வலி, குமட்டல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற பாதிப்புகளும் ஏற்படக்கூடும் என்று மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

லேசான சளி, காய்ச்சல் அல்லது இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் பொதுமக்கள் அதை சாதாரணமாக எண்ணி அலட்சியப்படுத்தக் கூடாது என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# அமெரிக்காவிடம் இருந்து எல்.பி.ஜி. சிலிண்டர் வாங்கும் இந்தியா!

புதுடெல்லி, ஆக. 27 –

அமெரிக்கா-ஈரான் போரால் மேற்கு ஆசியாவில் பதற்றமான சூழல் நிலவுகிறது. ஹார்முஸ் ஜலசந்தியில் பாதுகாப்பற்ற நிலையால், எண்ணெய், எரிவாயு விநியோகம் பெரிதும் தடைபட்டுள்ளது.

இதனால் சமையல் எரிவாயு (எல்.பி.ஜி.) மற்றும் திரவ இயற்கை எரிவாயு (எல்.என்.ஜி.) ஆகியவற்றை அமெரிக்காவிடமிருந்து கொள்முதல் செய்வதை இந்தியா பெருமளவில் அதிகரித்துள்ளதாக கடல்சார் புலனாய்வு நிறுவனமான கெப்லரின் தரவுகள் காட்டுகின்றன.

கெப்லர் தரவுகளின்படி, இந்தியா ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்காவிலிருந்து சுமார் 0.62 மில்லியன் டன் எல்.பி.ஜி.யையும், ஜுலை மாதத்தில் 0.89 மில்லியன் டன் எல்.பி.ஜி.யையும் இறக்குமதி செய்துள்ளது. இது நாட்டின் மொத்த எல்பிஜி இறக்குமதியில் 73 சதவீதத்திற்கும் அதிகம்.

அதே சமயம், வளைகுடா நாடுகளின் இந்திய விநியோகம் அடியோடு சரிந்துள்ளது.

இதே போல, கத்தாரில் இருந்து எல்.என்.ஜி. இறக்குமதி ஏப்ரல் மாதத்தில் பூஜ்ஜியமாகக் குறைந்தது. அதே நேரத்தில், அமெரிக்காவின் விநியோகம் ஜுலை மாதத்தில் 0.72 மில்லியன் டன்களிலிருந்து ஆகஸ்ட் மாதத்தில் சுமார் 0.75 மில்லியன் டன்களாக உயர்ந்தது.

அருகில் உள்ள மத்திய கிழக்கில் இருந்து வாங்குவதற்கு பதிலாக தொலைதூர அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதால் இந்தியாவின் இறக்குமதி செலவும் கணிசமாக அதிகரித்துள்ளது.